முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25 திகதி முதல்
சுபகிருது வருடம் மார்கழி மாதம் 03 திகதி வரை
(11.12.2022 ஞாயிறு முதல் 18.12.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கலிவெல்லப் பிறந்த ஞானியே
   கந்தப் பெருமான் மகா சூட்சும
   அழியாமை வரம் பெற்றுவந்த
   அரங்கனே உமை போற்றி
2. போற்றியே அகத்திய மகரிஷி யானும்
   புகலுவேன் இந்தியா தமிழகத்தின்
   உற்ற எதிர்கால பலன் குறித்தநல்
   உயர்வான சுபகிருது தேள் திங்கள் இருபானை திகதி மேல்
3. மேலாக சிலை திங்கள் சூலதிகதி வரை
   மொழிகுவேன் நடக்கும் நிகழ்வாக
   காலமதில் வார ஆசி தனைஉரைப்பேன்
   கட்டணமாக அரசு நிர்வகிக்கும்
4. நிர்வகிக்கும் சகல துறையிலும்
   நிதி நிலை நெருக்கடி கூடி
   நிர்வகிக்கும் கூடுதல் கட்டணமாக
   நெருக்கடி மக்களுக்குத் தந்து
5. தந்துமே அவதிகள் மிகுதியாகும்
   தக்கபடி மக்களுக்குச் சலுகையென
   தந்திடும் திட்டங்களிலும் குளறுபடி
   தமிழக இந்திய ஆளுமையில் கண்டு
6. கண்டுமே மக்களிடை நன்மதிப்பு
   கணக்கீட்டை இழக்க நேரும்
   தொண்டுவழி வந்த அரசுகள்
   தெய்வீகம் மறந்து சேவை மறந்து
7. மறந்து தன்னலம் கூடிட
   மக்கள் பணியே மகேசன் பணி என
   மறந்து தன் கழகம் குடியென
   மண்ணுலக மரபு மீறி நடந்திட
8. நடந்திட அடைந்த பேரு புகழை
   நழுவவிட்டு சோடையுற நேரும்
   இடர்தரா மக்களின் சுமையை
   இனியாகிலும் அறிந்து ஆளுமை

9. ஆளுமை சக்திகள் எல்லாம்
அனைத்துத் துறை அதிகாரிகளும் கூட
வலுவான உயர் பண்பாளர்களாக
வள்ளல் தன்மை குன்றா சேவை

10. சேவைதனை ஆற்றி வருதலுற
செயல் வேகமுடன் தேசவளர்ச்சியும்
அவனியே வியக்க மாறிடும்
ஆளுமையும் ஞான ஆட்சியாகத் தேறிடும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25 ம் நாள் 11.12.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 03 ம் நாள் 18.12.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

கொடுமையான கலியுகத்தின் பிடியில் இருந்து மக்களை காத்து கலியுகத்தை வென்று ஞானயுகம் படைத்திடவே இவ்வுலகினில் ஞானத்தலைவன் முருகப்பெருமானிடத்து அழிவிலாமை வரங்களை பெற்று ஞானகுருவாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புத மகா யோகியே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தின் எதிர்கால பலன்களாக சுபகிருது வருடம் கார்த்திகைமாதம் 25 ம் நாள் 11.12.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 03ம் நாள் 18.12.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்க மகானுக்கு உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்தியமகரிஷி.

அரசு நிர்வகிக்கும் எல்லா துறைகளிலும் வரும் காலம் நிதி நெருக்கடி அதிகமாகும் அரசின் நிர்வாக செலவிற்காக மக்கள் மீது அதிக கட்டணங்கள் ஒவ்வொரு துறையிலும் போடப்படும் இதனால் மக்களுக்கு துன்பங்கள் அதிகமாகும் அதுமட்டுமல்லாமல் மக்களுக்கு அரசு அளிக்கும் சலுகை திட்டங்களிலும் பலவிதமான குளறுபடிகள் உண்டாகும். அதனால் அரசுக்கு மக்களிடையே நன்மதிப்பு குறையும். அரசு தெய்வ நம்பிக்கை இழந்து மக்களுக்கு செய்கின்ற சேவைகளையும் மறந்து சுயநலமாக நடந்து கொள்வதுடன் "மக்கள்பணியே மகேசன் பணி" என்பதையும் மறந்து தமது கட்சி தமது குடும்பம் என்று மரபுகளை மீறி நடந்து கொண்டால் அரசு செய்வோர் இதுவரை பெற்ற பேரையும் புகழையும் நழுவ விடுவதோடு குறைகளும் உண்டாகும்.

ஆதனிலால் இனிமேலாகினும் மக்களுக்கு துன்பம் தராத வகையிலே மக்கள்மீது உண்டாக்கும் சுமைகளை குறைத்து கொள்வதோடு அரசு அதிகாரிகளும், துறைசார்ந்தவர்களும் சேவைமனப்பான்மையயுடன் நடந்து கொண்டு பண்புமிக்கவர்களாக வள்ளல் தன்மை உடையவர்களாக மாறி சேவையாற்றிவரவர செயல்வேகம் அதிகமாகி தேசம் வளர்ச்சி பெறும் உலகமே வியக்குமாறு விரைந்து முன்னேற்றம் அடையும், ஆட்சியும் ஞான ஆட்சியாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

தற்காலத்தில் யோகநெறி, யோகப்பயிற்சி, குண்டலினி யோகம், ஞான யோகம், பிராணாயாமம் போன்றவற்றை சொல்லிக் கொடுக்கிறோம் என்று சில அமைப்புகளும், சில போலி ஆன்மீகவாதிகளும் செயல்பட்டு வருகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். இவர்கள் விளம்பரம் செய்து மக்களை ஈர்க்கிறார்கள் என்றும் கேள்விப்படுகிறோம். இவர்களின் நோக்கமே மக்களின் ஆர்வத்தைப் பயன்படுத்தி பணம் சம்பாதிப்பது மட்டும்தான். இவர்களைப் பார்ப்பதே பாவம். இவர்களிடம் இவ்வித பயிற்சிகளை கற்றுக் கொள்ள முற்படுபவர்களை பாவவினைகள் சூழ்ந்து கொள்ளும். இந்தப் பயிற்சிகள் அனைத்தும் யோகிகளுக்கு மட்டுமே உரித்தானதாகும். மேலும், மகான் முருகப்பெருமானின் திருவடிகளைப் பூசிப்பதால் மட்டுமே முருகப்பெருமானின் ஆசியினால் யோகத்தை உணர்ந்து கொள்ள முடியும். இவ்வித பயிற்சிகள் மனிதர் மனிதருக்கு சொல்லிக் கொடுக்கக் கூடியதல்ல என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மகான் முருகப்பெருமானின் ஆசியுள்ள மக்கள் இவர்களை இனம் கண்டு தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள். ஆகவே வாழ விரும்பும் மக்கள் மகான் முருகப்பெருமானின் திருவடிகளில் பக்தி செலுத்துங்கள். நோய்வாய்ப்பட்டு சாக விரும்புகிறவர்கள் இவ்வித பயிற்சிகளில் ஈடுபடலாம்.

மக்களின் நன்மை கருதி இதை வெளியிட்டுள்ளோம்.

................

முருகப்பெருமான் துணை

**மகான் ஜனாதனர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.11.2022**, வெள்ளிக்கிழமை

**1.** வேலவனே ஞானத் தலைவனே
வையகம் காக்கும் விதமாக
கோலமதாய் வானவர்கள் வேண்ட
குருவரங்கனாக அவதாரம் எடுத்த

**2.** எடுத்தநல் ஆறுமுகா உமை போற்றி
இயம்பிடுவேன் சுபகிருது தேள் திங்கள்
இடரில்லா நவதிகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் **09** ம் நாள் **25.11.2022**, வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் அனுகூல ஆசி

**3.** ஆசிதனை ஜனாதனர் யானும்
அருளுவேன் உலகநலம்பெற
ஆசிதந்து கடைத்தேற்றும்படி
அகிலத்தில் அரங்கன் வடிவிலே

**4.** வடிவிலே ஆறுமுகப் பெருமான்
வரம்தந்து வழிகாட்டி அருள
தேடிவந்து தேசிகன் ஆசிவழி
தெய்வ அனுகூலம் அடைந்து

5. அடைந்து தேகமன பலமுடன்
ஆற்றல் பலவாறு அடைந்து
சோடை தடை எந்த வகையிலும்
செகத்தில் அனுகாத வண்ணம்
6. வண்ணமுடன் வளர்ச்சி கூடி
வந்தடையும் சர்வமும் ஏற்றம்
எண்ணம் வழி தூய்மை ஆகி
எங்கிலும் எவற்றிலும் ஆறுமுகன்
7. ஆறுமுகன் வழிகாட்டலே எனும்
அளவிலா சரணாகதி பெருகி
ஏறுமுகம் தனையே அடைவர்
இந்த உலகையே மாற்றும்
8. மாற்றும் மகான்களாக இனி
மரணம் வெல்லும் ஞானிகளாக
ஆற்றல் பெருகி உலகோர்
அரங்கனாக ஆறுமுகனார் தரும்
9. தருகின்ற தீட்சை பலத்தாலும்
தவ தரும பலத்தாலும் மாறுவர்
வருங்காலம் ஞானவான்கள் கரமதில்
வரமாக அடைதல் கண்டு
10. கண்டுமே ஞானத் தலைமையும்
கலி எனும் அரக்கன் அஞ்ச
உண்டாகும் ஞான ஆட்சியாக
உருவாகும் முருகப் பெருமான் தலைமையாக
11. ஆகவே இவை அற்புதத்தை
அகிலம் கண்டடைந்து சிறக்க
யுகமே ஞான சக்திய யுகமாக மாறும்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

துறையூர் ஓங்காரக்குடிலாசானுக்கு மகான் ஜனாதனர் அருளியுள்ள அனுகூல ஆசி நூலின் சாரம் :–

தற்போது நடைபெற்று வரும் யுகமான கலியுகத்தை அரக்கன் என்று,

***கலி எனும் அரக்கன் அஞ்ச***
***உண்டாகும் ஞான ஆட்சியாக...***

மகான் ஜனாதனர் வர்ணித்துள்ளார்கள். கலியுகம் பஞ்சமா பாதகங்களின் ஆதிக்கத்தில் உள்ளது. பொறாமை, பேராசை, கடுங்கோபம், பிறர் மனம் புண்படும்படி பேசுவது போன்ற அசுரர்கள் மனிதர்களை ஆட்கொண்டுள்ளார்கள். கலி எனும் அரக்கனும், மனிதர்களில் குடிகொண்டுள்ள அசுரர்களும் மகான் முருகப்பெருமானின் ஞான ஆட்சியின் ஞானத்தலைமையான மகான் முருகப்பெருமானை கண்டு அஞ்சி நடுங்குவார்கள் என்று மகான் ஜனாதனர் அருளியுள்ளார்கள்.

தேவர்களும், நவகோடி சித்தர்களும் போற்றி வணங்கும் மகான் முருகப்பெருமான் உலக மக்களின் நன்மைக்காக எடுத்துள்ள மறு அவதாரமே ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள். சுத்த சன்மார்க்க நெறியை உபதேசித்து வரும் ஓங்காரக்குடிலாசானை தேடி வந்து ஆசி பெறும் மக்கள், மகான் முருகப்பெருமானின் ஆசியைப் பெறுவதோடு, மனதிடம், தேகநலம் பெற்று, தாங்கள் மேற்கொள்ளும் செயல்களில் எவ்வித தடைகளுமின்றி முன்னேற்றம் காண்பார்கள் என்று மகான் ஜனாதனர் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், மகான் முருகப்பெருமானின் திருவடிகளில் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து சரணாகதி அடைபவர்கள் ஞானம் பெற்று ஞானவான்களாக மாறுவார்கள் என்றும்,இந்த உலகத்தையே ஞானயுகமாக மாற்றும் ஆற்றல் பெறுவார்கள் என்றும் அருளியுள்ளார்கள். மகான் முருக பெருமானின் திருவடிகளில் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கும் மக்களுக்கு மகான் முருக பெருமான் ஆசானாக இருந்து அவர்களை ஞான மார்க்கத்திற்கு அழைத்து செல்வார் என்பதற்கு அவர் ஆசிப் பெற்று ஞானத்தை அடைந்த நவகோடி சித்தர்களுமே சான்றாவார்கள்.

ஞானம் என்பதே உடலைப் பற்றியும், உயிர் என்கின்ற ஆன்மாவைப் பற்றியும், உடலின் இயக்கங்களைப் பற்றி அறிவதேயாகும். மகான் முருக பெருமானின் ஆசியிருந்தால், உடல் இயக்கத்திற்கு காரணமான மூச்சுக் காற்றின் இயக்கத்தை அறிந்து கொள்ள முடியும். இடது நாசியில் இயங்கும் இடது கலையான சந்திரகலையையும், வலது நாசியில் இயங்கும் வலது கலையான சூரிய கலையையும் சேர்த்து, ரேசித்து, பூரித்து புருவ மத்தியில் கும்பித்தால் அந்த வினாடியே காதில் தசநாதங்கள் கேட்கும். இது மனிதர்கள் தங்களது தனி முயற்சியினால் செய்யதக்கதல்ல. மகான் முருக பெருமானே மூச்சுக் காற்றினை இயக்க வேண்டும். மகான் முருக பெருமானின் ஆசியினால் வாசி வசப்பட்டவர்களுக்கு மட்டும்தான் இந்த இயக்கம் நடைபெறும். வாசி வசப்பட்ட ஞானிகள் இந்த இயக்கத்தின் விளைவாக தாங்கள் கேட்கும் தச நாத ஒலிகளை பூரித்து எழுதி வைத்துள்ளார்கள். ஞானபண்டிதனின் பரிபூரண ஆசிப் பெற்ற மகான் மஸ்தான் சாகிபு,

**நாதமுங் கீதமுங் கேட்கும் – அந்த**
**நாயகன் சந்நிதி தன்னிடை சேர்க்கும்**
**மாதவ நன்னிலை யார்க்கும் – நல்ல**
**மாசறு தேசிகன் பொற்பதம் போற்றி.**

**– மகான் மஸ்தான்சாகிபு – ஆனந்தக் களிப்பு – கவி எண் 25.**

என்று அந்த பொன்னான தருணத்தில் தான் பெற்ற அனுபவத்தை ஆனந்த களிப்பாக அருளியுள்ளார்கள். குற்றமற்ற முருக பெருமான் திருவடிகளை பூசித்தால் மட்டுமே இந்த வாய்ப்பு கிடைக்கும் என்றும் அருளியுள்ளார்கள்.

தன்னை சார்ந்திருந்த அனைத்து ஆன்மீகவாதிகளையும் ஞானத்தைப் பெற செய்த மகான் கொங்கணேஸ்வர சுவாமிகள்,

**சிலம்பொ லியென்னக் கேட்டும டிமெத்த**
**சிக்குள்ள பாதை துடுக்கமடி**
**வலம்புரி யச்சங்கமூது மடி மேலே**
**வாசியைப் பாரடி வாலைப்பெண்ணே!**

**– வாலைகும்மி – கவி எண் – 27.**

என்று தசநாதங்களில் சிலம்பொலியையும், வலம்புரி சங்கின் ஓசையையும் கேட்ட அனுபவத்தை பகிர்ந்துள்ளார்கள். மேலும் மகான் கொங்கணேஸ்வர்,

**வேதமும் பூதமுண் டானது வும்வெளி**
**விஞ்ஞான சாத்திர மானதுவும்**
**நாதமுங் கீதமுண் டானது வும்வழி**
**தான்சொல்லக் கேளடி வாலைப்பெண்ணே!**

**– வாலைகும்மி – கவி எண் 10.**

தான் அனுபவித்த நாதங்களையும் கீதங்களையும் குறித்து அருளியுள்ளார்கள். பல்வேறு ஞானிகள் தாங்கள் அடைந்த அற்புதங்களை ஞானத்தை அடைய விரும்பும் மக்களுக்கு வழிகாட்டும் நோக்கோடு பதிவு செய்துள்ளார்கள்.

**பாதையா னபெரும் பாதையைக் கிட்டிடப்**
**பட்டண முண்டொரு வட்டமதாய்**
**நாதமுங் கீதமுங் கேட்குத டிதெய்வ**
**நாயகன் சந்நிதி ஞானப்பெண்ணே.**

**– ஞானகும்மி – கவி எண் 52.**

ஞானமார்க்கத்தை விரும்பி ஏற்கும் ஆன்மீகவாதிகள் ஓங்காரகுடிலாசானின் தோற்றத்தில் இருக்கும் மகான் முருக பெருமானிடம் சரணடைந்து, ஓங்காரகுடிலாசான் உபதேசிக்கும் சன்மார்க்க சைவநெறியை ஏற்று வந்தாலே போதும் தங்களின் விருப்பம் நிறைவேறும் என்று மகான் ஜனாதனர் அருளியுள்ளார்கள்.

வேத தலைவன் வேலனை போற்றிட
நாதமும் கீதமும் நமக்கே கிட்டுமே!

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

..........

முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1153

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.11.2022, வெள்ளிக்கிழமை

1. கலி வெல்லப்பிறந்த மாதவராஜனே
கருணை மிஞ்சிய ஆறுமுக அரங்கனே
அழியாமை பெற்று என் சக்தியாக
அகிலத்தை ஆளவந்த சிவராஜயோகியே

2. யோகியே ஆறுமுக அரங்கனே
சித்திமிகு ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பெருமைபட ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் சுபகிருது தேள் திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 09 ம் நாள் 25.11.2022, வெள்ளிக்கிழமை)

3. தன்னிலே அரங்கனைக் கொண்டே இந்த உலகத்தை
தர்மஞான சத்திய லோகமாக
மண்ணுலகில் ஆறுமுகன் யான் மாற்றம் செய்வேன்
மகான் உன் அவதாரம் மகத்துவம் மிஞ்சியது

4. வகைபட உன்னை உலகோர் அறிந்தால்
வையகமே என் வழிபாட்டுக்கு வந்து
சண்முகனாரும் சற்குருவாகவந்த அரங்கனும்
சர்வமும் இந்த ஜெகத்தில்

5. பரிபூரண நிலையே எனும் பரமானந்த கதியாய் உலகோர்
பரிபக்குவ நிலைகள் கூடி
வரமென உன் வழி என் பலம் அறிந்து உணர்ந்து
வையகத்தில் ஞானிகளாக மாறுவர்

6. மாற்றத்தை தரும் அவதாரம் உன் அவதாரம்
மக்களெல்லாம் அறிந்துணர்ந்தால் போதும்
ஆற்றல்பட இந்த உலகில்
ஞானிகளாக மாறக் கூடும்

7. அன்னதனால் உலகோர் அரங்கன் திருவடி பற்றி
அண்ணலே என வணங்கி தொடர்ந்தால்
அகிலம் சடுதி ஞான ஆட்சிப்பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

மகான் சுப்ரமணியர் துறையூர் ஓங்காரக்குடிலாசானுக்கு அருளியுள்ள ஞான அறிவுரை ஆசி நூலின் சாரம் :–

அழியாமை என்ற மாபெரும் வரத்தைப் பெற்ற ஓங்காரக்குடிலாசானின் பிறவி நோக்கமே மகான் முருகப்பெருமானின் ஞான ஆட்சியை இந்த உலகில் அமைப்பதுதான் என்பதை

“அழியாமை பெற்று என் சக்தியாக
அகிலத்தை ஆளவந்த சிவராஜயோகியே
யோகியே ஆறுமுக அரங்கனே...”

என்று ஞான அறிவுரை ஆசியின் மூலமாக இந்த உலகிற்கு மகான் முருகப்பெருமான் அருளியுள்ளார்கள். ஓங்காரக்குடிலாசானின் வடிவத்தில் இருக்கும் மகான் முருகப்பெருமான் இந்த உலகில் நடக்கும் அநீதியை கட்டுப்படுத்தி, தர்மநெறியை பரப்பி, ஞானத்திற்கு உண்டான பாதையை மக்களுக்கு உபதேசித்து, அதன் பலனாக இந்த உலகம் சத்தியஞான உலகமாக மாறும் என்றும், அதுவே உலக யுகபெருமாற்றம் என்றும் அருளியுள்ளார்கள். ஓங்காரக்குடிலாசானிடம் தன்னை அர்ப்பணித்துள்ள தொண்டர்கள் தமிழகம் முதல் அகிலமெங்கும் ஞான ஆட்சி செய்வார்கள் என்றும் அதற்கு மகான் முருகப்பெருமான் முதல் நவகோடி சித்தர்களும் உறுதுணையாக இருப்பார்கள் என்றும் அருளியுள்ளார்கள். உலக மாற்றத்திற்காகவும், உலக மக்களின் நன்மைக்காகவும் மகான் முருகப்பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பே துறையூர் ஓங்காரக்குடில் என்று ஞானிகளால் அழைக்கப்படும் அகத்தியர் சன்மார்க்க சங்கமாகும். ஓங்காரக்குடிலிற்கு வருகை தந்து ஓங்காரக்குடிலாசானை

மகான் முருக பெருமானின் மறு அவதாரமாக வணங்கி வரும் ஆன்மீகவாதிகளுக்கு ஞானம் கைகூடி அவர்களால் இந்த உலகத்தில் விரைவில் மகான் முருகப்பெருமான் தலைமையில் ஞான ஆட்சி துவங்கும் என்றும் மகான் முருகப்பெருமான் அருளியுள்ளார்கள்.

.........

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

**பற்றற்ற வேலவன் பதமலர் போற்றுவோம்!**

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருப்பதற்கு காற்று, வெப்பம், குளிர்ச்சி ஆகிய மூன்றும் தான் அடிப்படையாகும். இந்த உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும், தாவரங்களாகிய புல், செடி, கொடி, மரம் போன்றவைகளும் காற்று, வெப்பம், குளிர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டுதான் இயங்கி வருகின்றன. மனித உடம்பின் இயக்கத்திற்கும் இந்த மூன்றும் தான் காரணமாக உள்ளது. இந்த மூன்றும் சமநிலையில் இருக்க வேண்டும். இந்த மூன்றும் சமநிலையில் இல்லாவிட்டால் நோய்வாய்ப்படுவார்கள் என்பதை வள்ளுவக் கடவுள்,

**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று.**

**– திருக்குறள் – மருந்து – குறள் எண் 941.**

(வளி – வாதம் – காற்று)

(எண்ணிய மூன்று – வாதம், பித்தம், சிலேத்துமம் என்பதை குறிக்கும்.)

என்று குறிப்பிட்டுள்ளார்கள். வாதமாகிய காற்றும், பித்தமாகிய வெப்பமும், சிலேத்துமமாகிய குளிர்ச்சியும் சமமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றில் ஒன்று மிகுதியானாலும் குறைந்தாலும் அதுவே நோய் வருவதற்கு காரணமாகிறது. இந்த மூன்றின் அளவை கணக்கிட்டுதான் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சையும் தரப்படுகிறது. இந்த மூன்றில் குறிப்பிடத்தக்கது வெப்பமாகும். வெப்பம் ஒரே நிலையில் இருக்காது என்பதே உண்மை. நவக்கிரகங்களுக்கு வெப்பம் தரக்கூடிய சூரியனிலே வெப்பம் கூடும் குறையும். சூரியனில் இருந்து வெப்பத்தை கிரகிக்கும் சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி போன்ற கிரகங்களிலும் வெப்ப நிலை கூடி குறைந்து சமநிலை அடையும். மனித உடம்பிலும் இதே தன்மைதான் காணப்படுகிறது. மனித வர்க்கம் மட்டுமில்லாமல் தாவரங்களுக்கும், எறும்பு முதல் யானை வரையிலான ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் உடம்பில் உள்ள வெப்பம் கூடும் குறையும். மனித உடம்பின் வெப்பம் **98.6** டிகிரி என்றளவிலே இருக்க வேண்டும். அந்த வெப்பம் குறைய தொடங்கினால் படிப்படியாக மனித உடம்பில் இருதயம் முதலான உறுப்புகள் தங்களது செயல்திறனை இழந்த கடைசியில் மரணம் ஏற்படும். **98.6** டிகிரிக்கு மேல் சென்றால் உடம்பிற்கு காய்ச்சல் முதல் ஜன்னி வரை ஏற்பட்டு அது உயிருக்கே ஆபத்தாகிவிடும். உடல் இயக்கத்திற்கு காரணமான வெப்பம் எனப்படும் பித்தத்தை சமமாக வைத்து கொள்வது என்பது மனித முயற்சியில் சாதிக்கக்கூடிய செயல் அல்ல. மகான் முருகப்பெருமானின் ஆசியிருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். ஏனென்றால், மகான் முருகப்பெருமான் தான் இந்த உலகத்தில் முதன்முதலாக உடம்பைப் பற்றி அறிந்து, உயிரைப் பற்றி அறிந்து, உடல் கூறு அறிந்து, உடல் இயக்கத்தை அறிந்து, உடம்பின் இயக்கத்தை

கட்டுப்படுத்தும் வழிமுறைகளை அறிந்து அதை செயல்படுத்தி வெற்றியும் கண்டவர் ஆவார். உடம்பின் இயக்கம் முதிர்ச்சியடைந்தால் முதுமையும், இயக்கம் முழுவதும் நின்று போனால் மரணமும் வரும் என்பதை கண்டறிந்து உடம்பின் இயக்கத்தை சமமாக நிலைநிறுத்தும் முயற்சியான தவத்தினை மேற்கொண்டு ஞானம் பெற்றவர் மகான் முருகப்பெருமான். ஆகவே மகான் முருகப்பெருமானின் ஆசியில்லாமல் இந்த சூட்சுமங்களை அறிந்து கொள்ள முடியாது. அவர்களின் ஆசியில்லாமல் உடம்பின் வெப்பத்தை ஒரே நிலையில் தக்க வைக்கவும் முடியாது. மகான் முருகப்பெருமானின் ஆசியினால் உடலின் வெப்பத்தை தக்க வைத்துக் கொண்ட சித்தர்குலத்தின் தலைவரான மகான் திருமூலர்,

**அங்கிமி காமைவைத் தானுடல் வைத்தான்**
**எங்குமி காமைவைத் தானுல கேழையுந்**
**தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்**
**பொங்கி மிகாமைவைத் தான்பொருள் தானுமே.**

**– திருமந்திரம் – திருமூலர் வரலாறு 15 – கவி எண் 87.**

என்று உடம்பில் உள்ள வெப்ப இயக்கத்தைப் பற்றியும், உலக இயக்கத்திற்கு வெப்பம் சீராக இருப்பதே காரணம் என்பது பற்றியும் அருளியுள்ளார்கள். அங்கி என்பது அக்னி (அ) வெப்பம் என்று பொருள்படும். வெப்பம் மிகுந்தாலும் குறைந்தாலும் உடம்பிற்கு ஆபத்து ஏற்படும்.

வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றையும் சமநிலையில் வைத்திருக்கும் சூட்சுமமே உடம்பின் ரகசியமாகும். மனித உடம்பு சுத்த தேகம் மற்றும் அசுத்த தேகம் இரண்டும் சேர்ந்துள்ள உடம்பாகும். ஞானிகள் அனைவரும் மகான் முருகப்பெருமானின் ஆசியால் உடம்பில் உள்ள அசுத்த தேகத்தை நீக்கி சுத்த தேகத்தை தக்க வைத்து கொண்டவர்களாவார்கள். அசுத்த தேகத்தை ஆறுமுக பெருமானால் மட்டும் தான் நீக்க முடியும். மனித உடம்பில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் அசுத்தம் கலந்து இருக்கும். அதே போல் மனித உடம்பில் இருக்கும் சுக்கிலத்திலும் சுத்த சுக்கிலம் மற்றும் அசுத்த சுக்கிலம் இரண்டும் கலந்து இருக்கும். மகான் முருகப்பெருமானின் ஆசியால் அசுத்த சுக்கிலத்தையும், உடம்பில் உள்ள அசுத்த தேகத்தையும் நீக்கிக் கொண்டவர்களே மரணமில்லா பெருவாழ்வைப் பெற்று ஞானியாக முடியும் என்பதே மகான் முருகப்பெருமான் கண்டறிந்த உண்மையாகும். மகான் முருகப்பெருமான் ஆசியினால் சுத்த தேகத்தை தக்க வைத்துக் கொண்ட மகான் சிவவாக்கியர் இந்த உண்மையை,

**உண்மையான சுக்கில முபாயமா யிருந்ததும்**
**வெண்மையாகி நீரிலே விரைந்து நீரதானதும்**
**தண்மையான காயமே தரித்துரூப மானதும்**
**தெண்மையான ஞானிகாள் தெளிந்துரைக்க வேணுமே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 251.**

என்று அருளியுள்ளார்கள். உண்மையான சுக்கிலம் தவத்தினை மேற்கொள்பவர்களுக்கு உபாயமாக இருக்கும் என்பதையும் அதே மனித உடலில் உள்ள அசுத்த சுக்கிலம் மனிதர்களுக்கு அபாயம் என்றும் உபதேசித்துள்ளார்கள். ஞானிகளுக்கு சுத்த சுக்கிலமே அமிழ்தமாக மாறி அவர்களுக்கு மரணமில்லா பெருவாழ்வினை தருகிறது. இந்த ரகசியத்தை மகான் முருகப்பெருமானின் ஆசியில்லாமல் அறிந்து கொள்ள முடியாது. மனித உடம்பில் உள்ள சுக்கிலம் கீழ்நோக்கி சென்றால் அது காமத்திற்கு மட்டுமே பயன்படும். ஆனால் அதே சுக்கிலம் சுத்த சுக்கிலமாக மேலே சென்றால் அதுவே அமிழ்தமாக மாறுகிறது என்பதை காலத்தை வென்ற மகான் திருஞானசம்பந்தர் அருளியுள்ளார்கள்

**இடரினும் தளரினும் எனதுறுநோய்**
**தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதியனே.**

**– மகான் திருஞானசம்பந்தர் தேவாரம் – திருவாவடுதுறை – கவி எண் 1.**

மிகப்பெரிய கடலாகிய இந்த உடம்பில் உள்ள சுத்த சுக்கிலத்தை அசுத்தமான நஞ்சிலிருந்து பிரித்து அதை மேலே செலுத்தக்கூடிய வல்லமை உடல் வேதியனான மகான் முருகப்பெருமானுக்கு மட்டுமே உண்டு என்றும் அருளியுள்ளார்கள்.

மகான் முருகப்பெருமானின் அருளாசியால் அமுதமாகிய சுத்த சுக்கிலத்தை நிலை நிறுத்திக் கொண்ட ஞானிகள்,

**உள்ளங் கரைய வுடல்கரைய ஆனந்த**
**வெள்ளங் கரைபுரண்டு மேலாகக் – கள்ளமலம்**
**பொய்யாத என்னுட் புகுந்தவா றென்கொலோ**
**ஐயா தியாகவினோ தா.**

**– சிவபோகசாரம் – அனுபூதி நிலை – கவி எண் 44.**

என்று பூரித்து பாடியுள்ளார்கள். மகான் முருகப்பெருமான் ஆசியால் சுத்த சுக்கிலம் மேல் நோக்கி செல்லும்போது ஏற்படும் தவ அனுபவத்தினை உணர்ச்சி மேலோங்க விவரித்துள்ளார்கள். அமுதம் உண்ட மகான் அருணகிரிநாதர் தான் கண்ட பரவச நிலையை அனுபவித்து,

**உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி**
**ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி**
**இன்பரசத் தேபருகிப் பலகாலும்**
**என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே**
**தம்பிதனக் காகவனத் தணைவோனே**
**தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே**
**அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே**
**ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.**

**– திருப்புகழ் – கவி எண் 2.**

என்று ஆனந்த பிரவாரமாக அருளியுள்ளார்கள்.

மகான் முருகப்பெருமான் தான் கண்டறிந்த இந்த உண்மையை தன்னிடம் சரணடைந்த அனைத்து சீடர்களுக்கும் உபதேசித்து அவர்களின் வாசியோடு வாசியாக கலந்து இருந்து உடல் இயக்கத்திற்கு காரணமான வாதம், பித்தம், சிலேத்துமம் போன்றவற்றை சமநிலையில் வைத்திருந்து அவர்கள் தவத்தினை மேற்கொண்டு ஞானத்தையும் பெற வைக்கிறார் என்பதற்கு நவகோடி சித்தர்களும் சான்றாவார்கள். மனித வர்க்கத்திற்கு ஞானம் என்பது மகான் முருகப்பெருமானால் மட்டுமே கிடைத்த ஒரு அரிய வரப்பிரசாதமாகும். மகான் முருகப்பெருமான் இந்த உலகில் தோன்றியதால் தான் இந்த உடம்பைப் பற்றி அறிந்து கொள்ளவும், உடம்பின் இயக்கத்தை பற்றியும் அறிந்து கொள்ளவும் வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் ஞான மார்க்கத்தை விரும்பி மகான் முருகப்பெருமான் திருவடிகளில் சரணடைந்தவர்களுக்கு மகான் முருகப்பெருமானே அவர்களை வழி நடத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் உடம்பில் தங்கி

இருந்து அவர்கள் உடம்பில் உள்ள அசுத்தத்தை நீக்கவும் செய்து அவர்களுக்கு சுத்த தேகமான ஒளி உடம்பை நிலை நிறுத்திக் கொள்ளவும் செய்கிறார். மகான் முருகப்பெருமானின் இவ்வித ஆற்றல் மிக்க செயல்கள் எந்தவித மனித முயற்சிகளிலும் அகப்படாத செயல்களாகும். மகான் முருகப்பெருமானின் ஆற்றலை முற்றுப்பெற்ற பல ஞானிகள் வியந்து பாராட்டி கவிகள் மூலம் அருளியுள்ளார்கள். மகான் முருகப்பெருமானின் ஆசியினால் ஞானம் பெற்று மரணமில்லா பெருவாழ்வினைப் பெற்ற மகான் அருணகிரிநாதர்,

**அண்டங்கள் ஒருகோடி ஆயினுங் குலகிரி**
**அநந்தமா யினுமேவினால்**
**அடையவுரு விப்புறம் போவதல் லதுதங்கல்**
**அறியாது சூரனுடலைக்**
**கண்டம் படப்பொருது காலனுங் குலைவுறுங்**
**கடியகொலை புரியு மதுசெங்**
**கனகா சலத்தைக் கடந்துமுனை யிட்டுக்**
**கடக்கின்ற துங்கநெடுவேல்**
**தண்டந் தநுத்திகிரி சங்குகட் கங்கொண்ட**
**தானவாந் தகன் மாயவன்**
**தழல்விழிக் கொடுவரிப் பருவுடற் பஃறலைத்**
**தமனியச் சுடிகையின் மேல்**
**வண்டொன்று கமலத்து மங்கையுங் கடல்ஆடை**
**மங்கையும் பதம்வருடவே**
**மதுமலர்க் கண்டுயில் முகுந்தன்மரு கன்குகன்**
**வாகைத் திருக்கை வேலே.**

**– வேல்விருத்தம் – கவி எண் 7.**

“அடேயப்பா! இவ்வளவு ஆற்றலா**?**” என்று அளவில்லா வியப்படைந்து பாராட்டுகிறார்கள். ஒரு நொடியில் வானுயர்ந்த மலைகளை உடைத்து தூள்தூளாக்கும் வல்லமையை ஒப்பிட்டு வியந்து அருளியுள்ளார்கள். மகான் முருகப்பெருமானின் ஆற்றலை இந்த பிரபஞ்சத்தில் உள்ள எந்த சக்தியையும் கொண்டு கணக்கிட முடியாது என்பதே உண்மை.

ஞானம் என்பது உடம்பை பற்றியும் உயிரைப் பற்றியும் அறிந்து உடலின் வெப்பத்தை நிலைப்படுத்தி மரணத்தை தவிர்த்து பேரானந்த வாழ்வான வீடுபேற்றை அடைவதாகும். உடம்பைப் பற்றி அறிந்தவர்களுக்கு உடல் மாசைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். உடல் மாசு தான் உயிர் மாசடைவதற்கு காரணமாக இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள முடியும். உடம்பில் உள்ள மும்மலக் குற்றங்களான மல, ஜல, சுக்கிலமே உடல் மாசடைவதற்கு காரணமாக உள்ளது. மகான் முருகப்பெருமானின் பேருபதேசமான ஜீவகாருண்ய கொள்கையை கடைப்பிடிக்காமல் இந்த உண்மைகளை அறிந்து கொள்ள முடியாது. இந்த கொள்கையை கடைப்பிடிக்காதவர்கள் யான் என்ற கர்வத்தோடு இருப்பார்கள். இந்த குணக்கேடுகளை உடையவர்கள் மூர்க்கர்கள் என்று மகான் மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

**முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட**
**வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.**

**– திருவாசகம் – அச்சோப்பதிகம் – கவி எண் 1.**

இங்கு சித்தமலம் என்பது ஆன்மாவில் உள்ள அசுத்தமாகும். இதை மகான் முருகப்பெருமானின் அருளாசியோடுதான் வேரோடு அறுக்க முடியும். ஆன்மா மாசடைவதிலிருந்து விடுபட்டவர்களே முத்தி நெறி அறிந்தவர்களாவார்கள். முத்தி நெறி அடைந்தவர்கள் சாந்தம், தன்னடக்கம், தயைசிந்தை போன்ற குணப்பண்புகளை உடையவர்களாக இருப்பார்கள். இவர்கள் என்றும் மகான் முருகப்பெருமானின் பாதுகாப்பில் இருப்பார்கள் என்பதை மகான் மாணிக்கவாசகர் மிக அழகான உதாரணத்தின் மூலம் அருளியுள்ளார்கள்.

**பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்**
**பரிந்துநீ பாவியே னுடைய**
**வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி**
**யுலப்பிலா வானந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த**
**செல்வமே சிவபெரு மானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே**
**னெங்கெழுந் தருளுவ தினியே.**

**– திருவாசகம் – பிடித்தபத்து – கவி எண் 9.**

எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டியதால் பசியையும் மறந்து அசந்து தூங்கும் தனது குழந்தையின் தொண்டை வறண்டு காய்ந்து போகுதே என்ற பரிதவிப்பில் தொட்டியில் தூங்கிக் கொண்டிருக்கும் தனது குழந்தையை எழுப்பி பால் ஊட்டும் தாயைவிட மேலானவர் மகான் முருகப்பெருமான் என்று உணர்ச்சி பொங்க போற்றுகிறார் மகான் மாணிக்கவாசக பெருமான். காலமறிந்து குழந்தையின் பசியை போக்குவது தாய். ஆனால் மகான் முருகப்பெருமானோ அதற்கும் மேலாக, தன்னிடம் சரணடைந்துள்ள மக்களின் உடம்பிலே தங்கி இருந்து உடம்பிலே உள்ள ஒவ்வொரு அணுவிலும் உள்ள நச்சுத் தன்மையுடைய அசுத்தத்தை நீக்கி, சுக்கிலத்திலும் உள்ள அசுத்த சுக்கிலத்தை பிரித்து நீக்கி, சுத்த தேகமான ஒளி தேகத்தை நிலை பெற வைக்கிறார் என்று மகான் மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

உடம்பின் ஆதாரமாக உள்ள சுக்கிலம் சராசரி மனிதர்களுக்கு விஷமாகவும், முத்திநெறி அடைந்தவர்களுக்கு அமிழ்தமாகவும் இருக்கிறது என்பதை மகான் அருணகிரிநாதர்,

**ஆலமாய் அவுணருக் கமரருக் கமுதமாய்**
**ஆதவனின் வெம்மை ஔிமீ**
**தரியதவ முநீவருக் கிந்துவிற் றண்ணென்**
**றமைந்தன்ப ருக்குமுற்றா**
**மூலமாம் வினையறுத் தவர்கள்வெம் பகையினை**
**முடித்திந்தி ரர்க்கு மெட்டா**
**முடிவிலா நந்தநல் கும்பத மளித்தெந்த**
**மூதண்ட மும்புகழும் வேல்**
**ஏலமா யானையின் கோடதிற் சொரிமுத்து**
**மின்பணைக ளுமிழு முத்தும்**
**இனிவாடை மான்மதம் அகிலோடு சந்தனம்**
**இலவங்க நறவமாருந்**

**தாலமா மரமுதற் பொருள்படைத் திடும்எயினர்**
**தருவநிதை மகிழ்நன் ஐயன்**
**தனிநடம் புரிசமர முருகன்அறு முகன் குகன்**
**சரவணக் குமரன் வேலே.**

**– வேல் விருத்தம் – கவி எண் 5.**

(இந்து – உடல், தண் – குளிர்ச்சி)

என்று அருளியுள்ளார்கள். மேலும், மகான் முருகப்பெருமானின் ஆசியோடு தவத்தினை மேற்கொள்பவர்களுக்கு தவத்தின் காரணமாக உடம்பின் வெப்பம் அதிகமானாலும் அதை தணித்து சமநிலைப்படுத்துவதும் சுத்த சுக்கிலம்தான் என்றும் சூட்சுமமாக தெரிவித்துள்ளார்கள்.

உடல் இயக்கத்தைப் பற்றி அறிவதற்கும், இயக்கத்தின் காரணமாக உண்டாகும் முதுமையைப் பற்றி அறிந்து வெல்வதற்கும், முக்திநெறியை அறிந்து மரணமில்லாப் பெருவாழ்வு பெறுவதற்கும் மகான் முருகப்பெருமானின் பரிபூரண ஆசியைப் பெறவேண்டும். மகான் முருகப்பெருமானின் ஆசியைப் பெற விரும்பும் மக்கள் சன்மார்க்க நெறியின் கொள்கைகளான,

சுத்த சைவ உணவினை மேற்கொள்ள வேண்டும்.

மகான் முருகப்பெருமானின் திருவடிகளை உள்ளம் உருக பூசித்து வர வேண்டும்.

ஜீவகாருண்யத்தின் அடிப்படையான அன்னதானத்தை செய்து வர வேண்டும்.

மேலும், வறுமை, நோய், பகை இல்லாத வாழ்வினைப் பெற்று தாங்கள் எடுத்திருக்கும் இந்த ஜென்மத்தை கடைத்தேற்றிக் கொள்ள விரும்பும் மக்கள்,

‘‘கும்பமுனியே தஞ்சம் தாயே! முருகா!!
அகத்தீசா அபயம் தாயே! முருகா!!
ஆறுமுகப் பெருமானே அடைக்கலம் தாயே! முருகா!!’’
என்று தொடர்ந்து வேண்டி பூசித்து வர வேண்டும்.

**போற்றுவோம் முருகப்பெருமான் திருவடிகளை!**
**பெறுவோம் பேரின்ப வாழ்வு!!**

…………

தினமணிக்கதிரின் பெருமை
வளமாம் தினமணியை வாங்கியே படித்திட
நலமாம் செய்திகள் நாளும் அறியலாம்
–முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்